மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இல்லை.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் 75 ஊராட்சிகளை உள்ளடக்கிய பகுதியாகும். அங்கே மற்றும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் நிறுவ இந்த அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, அரசின் கொள்கைப்படி ஒரு பஞ்சாயத்து ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம்தான் அமுல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் 374 பஞ்சாயத்து ஒன்றியங்களில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. தனிச் சிறப்பு வாய்ந்த பகுதிகளான 9 பஞ்சாயத்து ஒன்றியங்களில் இரண்டாவது ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. காளியாம்பூண்டி கிராமம் ஏற்கெனவே உத்திரமேரூர் ஆரம்ப சுகாதார நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளதால் இக்கிராமத்திற்கு என தனிப்பட்ட முறையில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியம் இல்லை.

அய்யம்பேட்டை ஊராட்சியில் புதிய மருத்துவமனை.

* வினா எண் 275—திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா —

(அ) உத்திரமேரூர் தொகுதி அய்யம்பேட்டை ஊராட்சியில் மருத்துவ மனை கட்ட அரசு எவ்வளவு தொகை வழங்கி உள்ளது ?

(ஆ) கால்கோள் விழா செய்து, கட்டட நிர்மான வேலைகள் நடைபெறாமல் இருப்பதற்கான காரணங்கள் யாவை ?

(இ) கட்டடப் பணிகளை விரைவில் துவங்க அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) 1974 ஆம் ஆண்டு அரசு மருந்தகம் கட்ட தமிழ்நாடு பரிசுச் சீட்டு சிறப்பு நல நிதியில் இருந்து ரூபாய் 65,000 அனுமதியளிக்கப்பட்டது.

(ஆ) மிகவும் முக்கிய குறைந்த தேவைகளுடன் கட்டிடம் கட்டுவதற்கு, அனுமதிக்கப்பட்ட நிதி போதுமானதாக இல்லாததால் கட்டிட வேலைகள் துவக்கப்படவில்லை.

1979 மார்ச் 7]

(இ) அரசின் நிதி நிலைமைகளுக்கேற்ப பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்திற்கும் வருகை தந்திருக்கிறார்கள். நெசவாளர்கள் மிகவும் அதிகமாக வாழக் கூடிய அந்தப் பகுதியிலே உருக்கு நோயால் நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அந்த இடத்திலே, ஏறத்தாழ, பேரறிஞர் பெருந்தகை அண்ணா காலத்திலேயிருந்து, அவர்கள் விரும்பிய அந்தப் பகுதியிலே ஒரு மருத்துவ நிலையம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை இருக்கிற காரணத்தாலே, அங்கே அத்திட்டத்தை விரைவிலே செயலாக்க இந்த அரசு துரிதமாக நடவடிக்கைகள் எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, நெசவாளர்கள் அதிகமாக இருக்கிற பகுதிகளிலே காச வியாதி அதிகமாக பீடிக்கப்படுகிறது என்பதை உணர்ந்த காரணத்தால்தான் இன்றைய தமிழக அரசும் மற்றவர்களும் அவர்களுக்கான அந்த பிரச்னையிலேயிருந்து விடுதலை பெறவழி வகைகளை வகுத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் ஒரு மருத்துவ மனை கட்ட வேண்டுமென்று அதற்கு ரூபாய் 65,000 ஒதுக்கினார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட காச நோயையெல்லாம் நீக்குவதற்கு ரூபாய் 65,000 போதுமானதாக இல்லையென்ற காரணத்தினால் அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசு அதை ஆய்ந்து தேவையான அளவுக்குக் கட்டிடங்கள் கட்டியாக வேண்டுமென்ற முறையில், அந்தத் திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

கோவை மாவட்ட கைத்தறி நெசவாளர்களது கோரிக்கை.

* வினா எண். 276—திரு. கு. ரமணி : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா ?

(அ) கோவை மாவட்ட கைத்தறி நெசவாளர் சங்கத்தின் சார்பில் தொழில் கோர்ட்டு தீர்ப்பை அமுலாக்கக் கோரி மறியல் போராட்டம் நடத்தப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டார்கள் ?

(இ) அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?